1993 அக்டோபர் 29]

67—

DEMARCATION OF ADYAR CREEK AS PROTECTED AREA

*No. 19220—Dr. BEATRIX D' SOUZA :

Will the Minister for Housing and Urban Development be pleased to state—

Whether the Government is aware that the Adyar Creek near Foreshore Estate, Santhome earmarked for development by MMDA is a protected area

மாண்புமிகு திரு. சே. ரகுபதி. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆம்.

Dr. BEATRIX D' SOUZA : Hon. Speaker, Sir, in "The Hindu of the 18th October 1993, there was an advertisement calling for ideas and concepts to develop an area of 45.5 acres of land in the Adyar area near the Foreshore Estate This seems to be a Rs. 40 crore project which is being taken up, based on G.O. No. 2186, Revenue Department, dated 16—10—1993. I would like to state that the creek is an integral part of the estuary. An old map of the area shows that the whole area of the estuary was originally a group of islands. After some time, the islands were joined together so, though the creek is now separate from the estuary, the whole estuary area is a protected area. As a matter of fact, it is an important sanctuary for rare birds. So, if the creek is to be developed separately, the whole eco-system will be effected. Therefore, in view of this objection, I would like to know whether the Government intends to go ahead with the project.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை அரசு ஆணை எண், 188 நாள் 13—5—1992-ல் 4.3 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள அடையாறு கழிமுகப் பகுதியை 13—5—1992 முதல் 5 ஆண்டு காலத்திற்கு வேட்டையாட தடை செய்யப்பட்ட பகுதி என அறிவிக்கப்பட்டுள்ளது, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் அடையாறு முகத்துவார மேம்பாட்டிற்காகக் குறிப்பிட்டுள்ள நிலப் பகுதி மேற்படி நிலப்பகுதியினுடைய வடக்கு ஓரத்தில் அமையப் பெற்றுள்ளது.

இப்பகுதி தெற்கு வாய்க்கால் கரைச் சாலையை வடக்கு எல்லையாகவும், தெற்கு கடற்கரைச் சாலையை கிழக்கு எல்லையாகவும், கிரீன்வேய்ஸ் சாலையை தெற்கு எல்லையாகவும். நகரமைப்பு திட்டச் சாலையை மேற்கு எல்லையாகவும் கொண்டுள்ளது, சுமார் 40 ஏக்கர் நிலத்திலே இந்தத் திட்டம் மேம்படுத்த பட்டுள்ளது, இதனாலே சுற்றுப் புறச் சூழலுக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லாமல் அந்த வனத் துறையினுடைய அறிவிப்பை நிறைவேற்றுகின்ற வண்ணம் வனப்பகுதி அங்கே உருவாக்கப் பட்டு சுற்றுபுறச்சூழலை பாதுகாப்பதற்காக இந்தப்பகுதி மேம் படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

Dr. BEATRIX D' SOUZA: Sir, I would like to know whether the Forest Department has given sanction for this scheme.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அங்கே வனப் பகுதியை உருவாக்கியிருக்கிற காரணத்தாலே வனத்துறையினுடைய அரசாணைக்கு எதிராக அங்கே எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது பாது காக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட்டு இருப்பது பறவை களை வேட்டையாடுவதை அது தடை செய்வதாக இருக்கிறதே தவிர வேறு எதற்கும் அங்கே வனத் துறை தடை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

68—

பட்டாசு மற்றும் தீப்பெட்டிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

*9895— திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் செய்யப்படும் பட்டாசு மற்றும் தீப்பெட்டிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா?